ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/44 - 2022 මාර්තු මස 30 වැනි බදාදා - 2022.03.30

*2273/44 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. - 21/1978 (x) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாகவும் அங்கீகரிகப்பட்ட GL 24 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2021, பெப்புருவரி 27 ஆந் திகதிய 2216/39 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதன் I ஆம் நிரலில் காணப்படுகின்ற “கல்வியியலில் பட்டப்பின் திப்புளோமா” என்னும் பதிவினையும் மற்றும் அதன் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவில் காணப்படுகின்ற பதிவினை உடனடுத்து இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்), இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு சமூக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமானி பட்ட நிகழ்ச்சிக்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, ஆகக் குறைந்த நுழைவுத் தகைமையாக பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வணிகத் துறை அல்லது கலைத் துறையில் ஒரே தடவையில் (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1A - PG 5797 — 510 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்திற்கான சுருக்கீட்டுப் பெயர்* |
|---|---|
| சமூக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமானி | பிஎட் கௌரவ (சமூக விஞ்ஞானம்) |

**தினேஷ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, மார்ச் 24.*

EOG *03 - 1063*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.